முதியோர்களுக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தின உறுதிமொழி ஏற்பு

திருவாரூர், ஜூன் 15: திருவாரூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் முதியோர்களுக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தின உறுதிமொழி, மாவட்ட ஆட்சியர் வ. மோகனச்சந்திரன் தலைமையில் திங்கள்கிழமை ஏற்கப்பட்டது.

'இந்திய குடிமகனாகிய நான், முதியோர்களை குடும்பத்தில் அரவணைப்போடு நல்லமுறையில் பராமரித்திடுவேன் எனவும், மனரீதியாகவும், உடல்ரீதியாகவும் காயப்படுத்தும் தகாத வார்த்தைகளை உபயோக்கிக்க மாட்டேன் எனவும், அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பேன்.

பொது இடங்களான மருத்துவமனை, வங்கி, பேருந்து போன்ற இடங்களில்முதியோர்களுக்கு முன்னுரிமை அளித்து அவர்களுக்கெதிரான கொடுஞ்செயல்கள், வன்முறைகள் எவ்விதத்திலும் இழைக்கப்படுவதை தடுத்திட பாடுபடுவேன்' என்று உறுதிமொழி ஏற்கிறேன் என மாவட்ட ஆட்சியர் வாசிக்க, அனைத்துத்துறை உயர் அலுவலர்களும் ஏற்றுக்கொண்டனர்.

நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் பா. கலைவாணி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் சங்கர், மாவட்ட வழங்கல் அலுவலர் செல்வபாண்டியன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) முருகேசன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர் உஷாராணி, மாவட்ட சமூகநலத்துறை அலுவலர் சியாமளா உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.

முதியோர்களுக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தின உறுதிமொழி ஏற்கும் மாவட்ட ஆட்சியர் வ. மோகனச்சந்திரன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள்.

குடவாசல் பேரூராட்சி நிர்வாகத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம்

திருவாரூர், ஜூன் 15: குடவாசல் பேரூராட்சியில் பல்வேறு பணிகள் கிடப்பில் போடப்பட்டுள்ளதாக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது.

குடவாசல் பேரூராட்சியில் பல்வேறு பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி பெற்றும், செயல்படுத்தப்படாமல் கிடப்பில் போட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதனால், பேரூராட்சி நிர்வாகத்தை கண்டித்தும், தண்டலை மயானக் கட்டடம், சாலை அமைக்க ஒப்பந்தப்புள்ளி கோரி இரண்டு ஆண்டுகளான நிலையில், உடனடியாக மயானக் கட்டடம், சாலை அமைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்; ஓகை மாரியம்மன் கோயில் தெருவில் உள்ள குளத்தில் சேதமடைந்துள்ள நடைபாதையை சீரமைக்க வேண்டும்.

பல லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்ட மீன், இறைச்சி மார்க்கெட் கடைகளை குறைந்த வாடகையில் ஏலம் விட்டு, இறைச்சி மார்க்கெட்டை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். பேரூராட்சி பகுதியில் உள்ள கழிவறைகளை செயல்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும்.

வாய்க்கால், குளங்களில் கொட்டப்படும் குப்பைகளை நீக்கி, நீர்நிலைகளை பாதுகாக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, குடவாசல் பேரூராட்சி அலுவலகம் அருகே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சிபிஎம் குடவாசல் நகரச் செயலாளர் டி.ஜி. சேகர் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் டி. முருகையன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஜி. சுந்தரமூர்த்தி ஆகியோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர். இதில், குடவாசல் தெற்கு ஒன்றியச் செயலாளர் டி. லெனின், மாவட்டக் குழு உறுப்பினர் ஆர். லெட்சுமி உள்ளிட்ட பலர் பங்கேற்று, கோரிக்கைகளை வலியுறுத்தி, முழக்கங்களை எழுப்பினர்.

மக்கள் குறைதீர் கூட்டம்: இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கல்

திருவாரூர், ஜூன் 15: மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில், வீட்டு மனைப் பட்டா கேட்டு விண்ணப்பித்த 3 பேருக்கு, உடனடியாக இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது.

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் வ. மோகனச்சந்திரன் தலைமையில் திங்கள்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில், பட்டா மாறுதல், புதிய குடும்ப அட்டை, ஆக்கிரமிப்பு அகற்றுதல், கல்விக்கடன், வீட்டுமனைப் பட்டா உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்த 415 மனுக்கள் அளிக்கப்பட்டன. இம்மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சியர், அவற்றை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி, குறித்த காலத்துக்குள் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை சார்பில் 1 மாற்றுத்திறனாளிக்கு ரூ.3,285 மதிப்பில் காதொலிக் கருவியை அவர் வழங்கினார். பின்னர், வீட்டுமனைப் பட்டா கேட்டு விண்ணப்பித்தவர்களில் 3 பேருக்கு உடனடியாக இலவச வீட்டுமனைப் பட்டாக்களை, மாலையில் ஆட்சியர் வழங்கினார்.

கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் பா. கலைவாணி, மாவட்ட வழங்கல் அலுவலர் செல்வபாண்டியன், தனித்துணை ஆட்சியர் (சமூகப் பாதுகாப்பு) முருகேசன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் சங்கர், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் உஷாராணி, மாவட்ட சமூக நல அலுவலர் சியாமளா உள்ளிட்ட பல்வேறு துறை அரசு உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

விவசாயத் தொழிலாளர்கள் தர்னா

நன்னிலம், ஜூன் 15: அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் நன்னிலம் ஒன்றியக் குழுவின் சார்பில், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, கடுவங்குடி ஊராட்சி அலுவலகம் முன்பாக தர்னா போராட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது.

100 நாள் வேலை அட்டை வைத்துள்ள அனைவருக்கும் வேலை வழங்க வேண்டும். சட்டக்கூலியான ரூ. 336 வழங்க வேண்டும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தை மீண்டும் அமல்படுத்த வேண்டும். கருவிழிப் படம் பதிவு முறையை கைவிட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இப்போராட்டம் நடைபெற்றது.

விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் நன்னிலம் ஒன்றியத் தலைவர் ஆர். சுந்தரமூர்த்தி தலைமை வகித்தார். நிறைவில், கோரிக்கைகளை வலியுறுத்தி 385 மனுக்கள் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் வழங்கப்பட்டன.

விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் பி. கந்தசாமி, ஒன்றியச் செயலாளர் சரவண.சதீஷ்குமார், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நன்னிலம் ஒன்றியச் செயலாளர் தியாகு. ரஜினிகாந்த், மாவட்டக் குழு உறுப்பினர் ஜெ. முகமது உதுமான், முன்னாள் ஒன்றியச் செயலாளர் கே. எம். லிங்கம், ஒன்றியப் பொருளாளர் சங்கர் உள்ளிட்டோர் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர். இதில், 100-க்கும் மேற்பட்ட பெண்கள் உள்பட 200-க்கும் மேற்பட்டோர் பங்கேற்று கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கமிட்டனர்.

திருவாசகம் முற்றோதல்

நீடாமங்கலம், ஜூன் 15: நீடாமங்கலம் விசாலாட்சி சமேத காசிவிசுவநாதர் கோயிலில் திருவாசகம் முற்றோதல் 50-ஆவது விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

முன்னதாக, விசாலாட்சி சமேத காசிவிசுவநாதர் உள்ளிட்ட அனைத்து சந்நிதிகளிலும் சிறப்பு அபிஷேகம், அலங்காரம் செய்யப்பட்டு, தீபாராதனை காட்டப்பட்டது. அலங்கரிக்கப்பட்ட மாணிக்கவாசகப் பெருமான் திருவுருவப்படத்திற்கு மாலைகள் அணிவித்து, திருவிளக்கேற்றி, சிவனடியார்கள் திருவாசகத்தை முற்றோதல் செய்தனர்.

இதில், திருவடிக்குடில் சுவாமிகள் கலந்து கொண்டு மாணிக்கவாசகப் பெருமானுக்கு ஆராதனைகள் செய்தார். இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டனர். அன்னதானம் வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை பிரதோஷ கமிட்டியினர் மற்றும் திருவாசகம் முற்றோதல் கமிட்டியினர் செய்திருந்தனர்.

விழிப்புணர்வுப் பேரணி...

திருவாரூர் வேலுடையார் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளியில் செயல்படும் போதைப் பொருள் எதிர்ப்பு மன்றம் சார்பில் திங்கள்கிழமை நடைபெற்ற போதைப் பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வுப் பேரணியை தொடங்கி வைக்கிறார் பள்ளியின் தாளாளர் கே.எஸ்.எஸ். தியாகபாரி. உடன், கல்விக் குழு உறுப்பினர் கே.ஜி. சீலன், நிர்வாகக் குழு உறுப்பினர் டி. சிவரஞ்சனி, தலைமையாசிரியர் எஸ். அகிலன், உதவி தலைமை ஆசிரியர் எல். செல்வம், நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் எம். கணேசன் உள்ளிட்டோர்.

பத்தாம் வகுப்பு அரசுத் தேர்வில் சிறப்பிடம் பெற்ற மாணவருக்கு பாராட்டு

நீடாமங்கலம், ஜூன் 15: நீடாமங்கலம் அரசினர் உயர்நிலைப் பள்ளியில், 10-ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் சிறப்பிடம் பிடித்த மாணவர் கீர்த்திவாசனுக்கு, வணிகர் சங்கம் சார்பில் திங்கள்கிழமை பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

இதையொட்டி, கீர்த்திவாசனுக்கு பரிசு மற்றும் ரூ. 1,000 வழங்கப்பட்டது. வணிகர் சங்க துணைத் தலைவர் க. பாரதி மோகன் தலைமை வகித்தார். சங்க துணைச் செயலாளர்கள் ஆசைத்தம்பி, ஜெயபால், நிர்வாகக் குழு உறுப்பினர் வீரையன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சங்க நிர்வாகிகள் சதீஷ், ரவி, செந்தில்குமார், பார்த்திபன், வேலவன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

விசாரணையின்போது இளைஞர் உயிரிழப்பு: போலீஸார் மீது நடவடிக்கை கோரி மனு

திருவாரூர், ஜூன் 15: விசாரணையின்போது தாக்கப்பட்ட இளைஞர் உயிரிழப்புக்கு காரணமான போலீஸார் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை மனு அளிக்கப்பட்டது.

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மக்கள் அதிகாரக் கழகத்தின் மாவட்ட இணைச் செயலாளர் ந.கு. லெனின் அளித்த மனு விவரம்:

மானாமதுரையைச் சேர்ந்த பட்டதாரி இளைஞர் ஆகாஷ் டெலிசன் என்ற இளைஞரை, விசாரணை என்ற பெயரில் மார்ச் 6-ஆம் தேதி அழைத்துச் சென்று, அடித்து காலை உடைத்து தாக்கினர். இதனால், மார்ச் 8-இல் ஆகாஷ் டெலிசன் உயிரிழந்தார்.

இவர்கள் மீது கொலை வழக்குப் பதிவு செய்யவும், எஸ்சி, எஸ்டி வன்கொடுமைத் தடுப்புச் சட்டப் பிரிவுகளிலும் வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்க, மதுரை உயர்நீதிமன்றக் கிளை உத்தரவிட்டு, 100 நாள்களாகியும் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை.

கொலை செய்யப்பட்ட ஆகாஷ் டெலிசனின் பெற்றோர், தனது மகனின் உடலைக் கூட வாங்காமல் தற்போது வரை நீதி கேட்டு போராடி வருகின்றனர். எனவே, மதுரை உயர்நீதிமன்ற கிளையின் உத்தரவுப்படி, கொலை வழக்கு மற்றும் எஸ்சி, எஸ்டி வன்கொடுமை வழக்கில் 18 காவலர்கள் பெயரை சேர்த்து, கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். போலீஸ் விசாரணை அனைத்தும் விடியோ பதிவு செய்ய வேண்டும். அனைத்து காவல் நிலையங்களிலும் கேமரா பொருத்தும் நடவடிக்கையை விரைவுபடுத்த வேண்டும் என அந்த மனுவில் வலியுறுத்தியுள்ளனர்.

தென்குவளவேலி பள்ளியில் சமூக அறிவியல் மன்றம் தொடக்கம்

நீடாமங்கலம், ஜூன் 15: வலங்கைமான் அருகேயுள்ள தென்குவளவேலி அரசு உயர்நிலைப் பள்ளியில், சமூக அறிவியல் மன்றம் தொடக்க விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

பள்ளியின் சமூக அறிவியல் துறை சார்பில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு, தலைமை ஆசிரியர் வெற்றிவேலன் தலைமை வகித்தார். சமூக அறிவியல் ஆசிரியர் சூரியகுமார் முன்னிலை வகித்தார். மாணவர் செயலாளரான ஒன்பதாம் வகுப்பு மாணவி தீபஸ்ரீ, பசிபிக் பெருங்கடலில் ஏற்பட்டுள்ள எல்- நினோவால் ஏற்படும் பாதிப்பு குறித்து பேசினார்.

தொடர்ந்து சமூக அறிவியல் மன்ற உறுப்பினர்களாக மாணவர்கள் லித்திகா, தர்ஷன், சுவாதி, சஞ்சித், மதுமிதா, ரோஹித் குமரன், மாதேஸ்வரன், சுமித்ரா ஆகியோர் பொறுப்பேற்றுக் கொண்டனர். மன்றத்தின் இணைச் செயலாளரான மாணவர் மாதேஸ்வரன் நன்றி கூறினார்.

மன்னார்குடியில் பாசிபடர்ந்த குளம் சீரமைக்கப்படுமா?

மன்னார்குடி, ஜூன் 15: மன்னார்குடியில் பாசிபடர்ந்து, நெகிழிக்கழிவுகள் நிரம்பி, சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்படும் ஒத்தைதெரு குளத்தை சீரமைக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மன்னார்குடி ஒத்தைதெரு ஆனந்தவிநாயகர் கோயில் அருகே வருவாய்த்துறைக்குச் சொந்தமான குளம் உள்ளது. இதை நகராட்சி நிர்வாகம் பராமரித்து வருகிறது என்றாலும், கோயிலின் அருகே இருப்பதால் இதனை ஆனந்த விநாயகர் கோயில் குளம் என்றே பொதுமக்களால் குறிப்பிடப்படுகிறது.

இந்த குளத்திற்கு நீர்வரத்து வாய்க்கால் வசதி இல்லாததால், மழை மட்டும் இக்குளத்திற்கு நீர் ஆதாரம். தண்ணீரை வெளியேற்ற மட்டும் வடிகால் வசதி உள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்பு வரை, இந்த குளத்தை குளிப்பதற்கு பயன்படுத்தி வந்தனர். மேலும், நிலத்தடி நீர்மட்டம் உயர்வதற்கான ஆதாரமாகவும் இருந்து வந்தது.

பாசி படர்ந்து காணப்படும் ஒத்தைதெரு ஆனந்தவிநாயகர் கோயில் குளம்.

பொதுமக்கள் எதிர்பார்ப்பு

இந்த குளத்தின் இடது கரையில், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. இங்கிருந்து கழிவுநீர் குளத்தில் கலப்பதால், சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதாக புகார் எழுந்தது. கடந்த ஆண்டு அதிமுகவைச் சேர்ந்த நகர்மன்ற 25-ஆவது வார்டு உறுப்பினர் ஆர்.ஜி. குமார் முயற்சியில், நமக்கு நாமே திட்டத்தின்கீழ் இடதுகரை பகுதியில் டைல்ஸ் பதிக்கப்பட்டு, கழிவு நீர் கலப்பது முழுமையாக தடுக்கப்பட்டது.

இந்நிலையில், கடந்த சில ஆண்டுகளாக, இந்த குளத்து நீரில் பாசி படர தொடங்கி, அண்மை காலமாக தண்ணீர் தெரியாத அளவிற்கு குளம் முழுவதும் பாசி மண்டியுள்ளது. மேலும், நெகிழிப் பைகள், குடிநீர் காலிப்பாட்டில்கள் என குளத்தில் குப்பைகள் நிறைந்து காணப்படுகிறது.

இதனால், நீர் துர்நாற்றம்வீசுவதுடன், சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு, சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டு வருவதால், அப்பகுதியில் வசிப்போர், கோயிலுக்கு வரும் பக்தர்கள் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகின்றனர். எனவே, மன்னார்குடி நகராட்சி நிர்வாகம், போர்க்கால அடிப்படையில், ஒத்தைதெரு ஆனந்த விநாயகர் கோயில் குளத்தில் பாசிபடர்ந்த நீரை முழுமையாக வெளியேற்றி, தூர்வாரி, சீரமைத்து, தண்ணீர் நிரப்பி முறையாக பராமரிப்பதுடன், குப்பைகள் கொட்டப்படுவதை தடுக்க கண்காணிப்பு கேமராக்கள் பொருத்த வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நீரொழுங்கி படிக்கட்டு இடிந்து 2 மாணவிகள் காயம்

திருத்துறைப்பூண்டி, ஜூன் 15: திருத்துறைப்பூண்டி அருகே நீரொழுங்கி படிக்கட்டுகள் இடிந்து 2 மாணவிகள் காயமடைந்தனர்.



நீரொழுங்கி பாலத்தில் இடிந்த படிக்கட்டுகள்.

திருத்துறைப்பூண்டி அருகேயுள்ள சேகல் கிராமத்தைச் சேர்ந்த மாணவிகள் பிரவீனா (17), சபிதா (16). இவர்கள் கட்டிமேடு அரசு மேல்நிலைப் பள்ளியில் முறையே பிளஸ்2, பிளஸ்1 படித்து வருகின்றனர்.

திங்கள்கிழமை காலை வழக்கம்போல் இருவரும் பள்ளிக்கு, முள்ளியாறு நீரொழுங்கி பாலம் வழியாக சென்றனர். அப்போது, நீரொழுங்கி அணைப் பாலத்தை ஒட்டியுள்ள படிக்கட்டுகளில் அவர்கள் ஏறியபோது, அது இடிந்து விழுந்தது. இதில், மாணவிகள் இருவரும் படுகாயமடைந்தனர்.

அப்பகுதியினர், இருவரையும் மீட்டு திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். திருத்துறைப்பூண்டி எம்எல்ஏ க. மாரிமுத்து மருத்துவமனைக்கு நேரில் சென்று ஆறுதல் கூறினார்.

சேதமடைந்த பாலப் படிக்கட்டுகளை உடனடியாக சரி செய்ய வேண்டும் என மாணவிகளின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர். மேலும், பாலப் படிக்கட்டுகளை முறையாக பராமரிக்காத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி, அரசு மருத்துவமனை அருகே வேதாரண்யம் சாலையில் மறியலில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்திற்கு வந்த பொதுப்பணித் துறை உதவி செயற்பொறியாளர் மதியழகன், எம்எல்ஏ க. மாரிமுத்து ஆகியோர் பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி, மூன்று நாள்களில் நீரொழுங்கி பாலப் படிக்கட்டுகளை முழுமையாக கட்டி தர உறுதியளித்தனர். இதைத்தொடர்ந்து சாலை மறியல் விலக்கிக் கொள்ளப்பட்டது.

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா வேது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: எண்.74, அன்னகாமாட்சி டவர், தெற்கு வீதி, வார்டு எண்.2, ப்ளாக் எண்.38, தெற்கு கிராமம், திருவாரூர், தமிழ்நாடு-610001

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்புநடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்தினை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்து "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	15.05.2026 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித்தொகை (EMD)
1639210030000002 1.Mr.சண்முகம்.T, 2. Mrs.மலர்கொடி	(I) 13.07.2021 & 23.09.2021 அன்றுள்ளபடி ₹ 9,75,915/- (ரூபாய் ஒன்பது லட்சத்து எழுபத்து ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து பதினைந்து மட்டும்) (ii) அடையாளபூர்வமான சுவாதீனம் & நேரடியான சுவாதீனம் 14.09.2022 & 14.11.2025	₹ 8,92,624.19 (ரூபாய் எட்டு லட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து அறுநூற்று இருபத்து நான்கு மற்றும் பைசா பத்தொன்பது மட்டும்)	₹ 5,97,000/- (ரூபாய் ஐந்து லட்சத்து தொண்ணூற்று ஏழாயிரம் மட்டும்)	₹ 59,700/- (ரூபாய் ஐம்பத்து ஒன்பது லட்சத்து எழுநூறு மட்டும்)

சொத்து விவரம்: நாகப்பட்டினம் பதிவு மாவட்டம், திருவாரூர் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட R.S.எண்.60/15, **நாரணமங்கலம் கிராமம், திருவாரூர் பஞ்சாயத்து யூனியன், திருவாரூர் வட்டம், திருவாரூர் மாவட்டம்** என்றும் முகவரியில் **100 சதுர மீட்டர் மனை, அதனுடன் RCC கட்டிடம்** மற்றும் அனைத்து இதர வசதிகள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். அளவுகள்: கிழக்கு மேற்காக: வடக்கு பக்கம் 8 மீட்டர், தெற்கு பக்கம் வடிவமற்ற. தெற்கு வடக்காக: கிழக்கு பக்கம் 13.6 மீட்டர், மேற்கு பக்கம் 14 மீட்டர் மொத்தம் 100 சதுர மீட்டர். எல்லைகள் கிழக்கு: சுப்பையய்யன் வீட்டு மனை, மேற்கு: சாமிக்கண்ணு வீட்டு மனை, தெற்கு: பாண்டவையாரு.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 04.07.2026 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி: 03.07.2026 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம் 02.07.2026 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
Mr.S.ஞானவேல் - 98410 17131 / Mr.டிஜோ ஷாஜன் - 78451 92961

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான M/s.C1 India PVT LTD. மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு Mr. Prabhakaran (Mob: 74182 81709)) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை https://www.bankeauctions.com-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம், விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். M/s. C1 India PVT LTD, Helpline Number's-7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com

ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

தேதி: 16.06.2026

ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட்

லீகல் & சப்போர்ட் டீம், 2வது தளம், கதவு எண். 31, பழைய எண்.14, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை - 600 004.

சுவாதீன அறிவிப்பு

விதி 8(1)-ன் கீழ் (அசையா சொத்துக்களுக்காக)
SARFAESI சட்டம் 2002ன் u/s 13(4) சொத்துக்களை வைத்திருப்பது தொடர்பான அறிவிப்பு வெளியீடு

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (54/2002)-ன் கீழ் மற்றும் மேற்குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 13(12), உரிமை அமலாக்கச் சட்டம் 2002 விதி 9-ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் படி கீழ் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கணக்குகளுக்கு எதிராக குறிப்பிட்டுள்ள தேதிகளில் கேட்பு அறிவிப்பு வழங்கப்பட்டு மற்றும் அவர்களுக்கு இந்த அறிவிப்பு பெறப்பட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் தொகையை திரும்ப செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது என இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

சம்பந்தப்பட்ட கடன்தாரர்/அடமானதாரர்கள்/ஜாமீன்தாரர்கள் மேற்சொன்ன தொகையை திரும்ப செலுத்த தவறியதால் கடன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாக அறிவிக்கப்படுவது என்னவெனில் கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்துக்களை மேற்சொன்ன சட்டம் 13(4)-ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியும், அதனுடன் வாசிக்கப்பட வேண்டிய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகளின் கீழ் விதி 9-க்கு இணங்கவும் கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரி ஒவ்வொரு கணக்குகளுக்கு எதிராக குறிப்பிட்டுள்ள தேதிகளில் சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார்.

கடன்தாரர்/அடமானதாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சொத்துக்களின் மீது எந்தவிதமான பரிவர்த்தனைகளும் வைத்துக் கொள்ளக் கூடாது அப்படி வைத்துக்கொண்டால் அது ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட்-க்கு செலுத்த வேண்டிய தொகை மற்றும் வட்டியுடன் சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டவையாகும்.

சட்டப்பிரிவு 13-ன் உட்பிரிவு (8)ன் ஷரத்துகளின் கீழ் அமைக்கப்பட்ட விதிகளின்படி பிணையமாக்கப்பட்ட சொத்துக்களை மீட்டுக்கொள்ள கடன்தாரர்/அடமானதாரர்கள் /ஜாமீன்தாரர்களுக்கு உள்ள கால அவகாசத்தை கவனத்தில் கொள்ளவும்.

கடன்தாரர் / இணை கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி மற்றும் கணக்கு எண்.	அறிவிப்பு தேதி	சுவாதீன தேதி	நிலுவைத் தொகை
Ref No. HL / 8020 **1. திரு. கர்ணன், (கடன்தாரர்),** த/பெ. திரு. தமிழ்மதிநாதன், **2. திரு. தமிழ்மதிநாதன், (இணை கடன்தாரர்),** த/பெ. திரு. கிருஷ்ணமூர்த்தி, **இருவரின் முகவரி :** எண்.3/262, பால்பண்ணை தெரு, மன்னம் பந்தல், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் - 609 305. **மேலும் :** சர்வே எண்.217, மனை எண்.68, ஸ்ரீ அண்ணாமலை நகர், மயிலாடுதுறை - 609 001.	13.01.2026	12.06.2026	15.06.2026 அன்று வரை ரூ.15,02,576.43/- மேலும் இத்தொகை 15.06.2026 வரை வட்டிடன்

திரு. கர்ணன்.T அவர்களுக்கு சொந்தமான சொத்தின் விவரம் : அட்டவணை சொத்து : மயிலாடுதுறை பதிவு மாவட்டம், மயிலாடுதுறை இணை - 1 துணைப்பதிவாளர், மயிலாடுதுறை டவுன், வார்டு எண்.7, பிளாக் எண்.10, மனை எண்.68., ஸ்ரீ அண்ணாமலை நகர் என்ற முகவரியில் டவுன் சர்வே எண்.217ன்படி உள்ள வீடு மற்றும் கட்டிடம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். அளவுகள் : கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில் - 40 அடி, தெற்கு பகுதியில் - 40 அடி, தெற்கு வடக்காக கிழக்கு பகுதியில் - 60 அடி, மேற்கு பகுதியில் - 60 அடி சேர்த்து **மொத்த பரப்பளவு - 2400 சதுர அடி அல்லது 223 சதுர மீட்டர்** மனை. இதில் 1100 சதுர அடி RCC வீட்டு கட்டிடம் மற்றும் மின்சார இணைப்பு உட்பட. பட்டா நடைமுறையின்படி இந்த சொத்தானது டவுன் சர்வே எண்.217/1Aல் உள்ளது. எல்லைகள் : கிழக்கில் : மனை எண்.69, மேற்கில் ; மனை எண்.67, வடக்கில் ; மனை எண்.79, மேற்கில் : மனைப்பிரிவு சாலை.

தேதி : 12.06.2026
இடம் : சென்னை

அங்கீகாரம் பெற்ற அதிகாரி
ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட்